**CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE**
මැතිවරණ ප්‍රචණ්ඩත්ව නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
**தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்**
No 160G, Poorwarama Road, Kirulapone **Tel:** +094-11 2826388/+094-11 2826384
**Fax**: +094-11 2826146 **E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org

திரு.மகிந்த தேசப்பிரிய, தலைவர், இலங்கை தேர்தல் ஆணைக்குழு, ஜனாதிபதிக் குழு திரு. நளின் அபேசேகர, இலங்கை தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர், போராசிரியர் ரட்ணஜீவன் ஹுல், இலங்கை தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்,
இலங்கை தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல்கள் செயலகம்,
சரண வீதி,
ராஜகிரிய.
13/10/2019

**ஜனாதிபதித் தேர்தல் 2019: இராணுவ அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட கூற்றுகளை உபயோகிப்பதன் மூலம் தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்ட ஒழுக்கக் கோவையை, ஜனாதிபதித் தேர்தல் 2019 இல் போட்டியிடும் வேட்பாளர்கள் மீறுகின்றனர்**

தங்களது தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ளும் போது தேர்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட ஒழுக்கக் கோவையை இணங்கியொழுகுவதற்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும் தேவைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், ஒரு பத்திரிகை விளம்பரத்தில் காணப்பட்டவாறு, ஒழுக்க நெறிகள் கோவையின் ஒரு மீறுதல் குறித்தான சம்பவத்தை, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV), தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வருகிறது.

13/10/2019 (இன்று) விநியோகத்திற்காக உள்ள மூன்று செய்தித்தாள்கள், ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச பற்றி முன்னாள் முப்படைத் தளபதிகளால் மேற்கொள்ளப்பட்ட கூற்றுகளை தாங்கி ஒரு முழுப்பக்க விளம்பரத்தைக் கொண்டிருந்தன.

தற்போதைய இராணுவத் தளபதி, லெப்டினன்ட். ஜெனரல் சவேந்திர சில்வாவினால் டிசம்பர் 28, 2009 அன்று மேற்கொள்ளப்பட்ட கூற்று இதற்கு ஒரு உதாரணமாக நிற்கின்றது. லெப்டினன்ட். ஜெனரல் சவேந்திர சில்வா தற்போது கடமையிலுள்ள ஓர் இராணுவத்தளபதியாக இன்னமும் உள்ளதுடன் (இணைக்கப்பட்டுள்ள விளம்பரத்தை தயவுசெய்து அத்தாட்சியாகப் பார்க்கவும்) அவரின் கூற்றின் உபயோகம் இலங்கையில் சிவில்-இராணுவ உறவுகளின் நேர்மையை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. மேலும், இந்த நடைமுறையை ஏனைய வேட்பாளர்களும் கடைப்பிடிப்பார்களாயின் தேர்தலின் நேர்மைத்தன்மை கடுமையான வகையில் விட்டுக் கொடுக்கப்பட்டு விடுவதாக அமைந்துவிடும் என நாம் நம்புகிறோம்.

இதற்குப் பதிலாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டுமென நாங்கள் பரிந்துரைப்பதுடன் இந்த விடயம் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நீங்கள் எங்களுக்கு தெரிவிப்பீர்களாயின் அதனை நாங்கள் மிகவும் பாராட்டுவோம்.

எங்களது ஒத்துழைப்புக்கு உறுதியளிக்கிறோம்.

உங்களது பதிலை எதிர்பார்த்திருக்கிறோம்.

நன்றி,

மஞ்சுள கஜநாயக்க
தேசிய ஒருங்கிணைப்பாளர்